Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 ◆ இதழ் Issue : 127 ◆ திங்கள் Monday ◆ 09.03.2026 ◆ பக்கங்கள் Pages:4 ◆ ₹ 6 ◆ ஈரோடு Erode

# கலைஞர் நூற்றாண்டு நாணய நினைவு தூண்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



பெரம்பூர்: சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில், வடசென்னைவளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.28.25 கோடியில் முடிவுற்ற 3 பணிகள், சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.4.23கோடியில்முடிவுற்ற 3 பணிகள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில், ரூ.12.48 கோடியில் மேம்படுத்தப்பட்ட கழிவுநீர் உந்துநிலையங்களை கொளத்தூர் தொகுதியில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று திறந்துவைத்தார்.

மேலும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ்,பெரம்பூர் நெடுஞ்சாலையில் ரூ.4.20 கோடியில் மேம்படுத்தப்பட்ட முரசொலி மாறன் பூங்கா மற்றும் கலைஞர் நூற்றாண்டு நாணய நினைவுத் தூணையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். தற்போது இந்த முரசொலி மாறன் பூங்காவில் பொலிவூட்டப்பட்ட நுழைவாயில், இசை நீரூற்று, பார்வையாளர் இருக்கை வசதியுடன் கூடிய சறுக்கு வளையம், நீண்ட நடைபாதை, நிழலாடும் நடைபாதை வசதிகள், தோட்டங்கள் மற்றும் கூரையுடன் கூடிய திறந்தவெளி அமைப்புகள் யோகாமையம்,2 எண்ணிக்கையில் பேட்மிண்டன் கோர்ட், சிறுவர்களுக்கான உடற்பயிற்சி உபகரணங்கள் உள்பட பல்வேறு சிறப்பம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பெரம்பூர், கௌதமபுரம் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் புதிதாக கட்டப்பட்ட டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டக சாலை நியாயவிலை கடைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், பல்லவன் சாலையில் டான்போஸ்கோபள்ளி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில், இஸ்லாமியகுடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரம் பேருக்குஅரிசி,வேட்டி, சட்டை,சேலை,பேரிச்சம்பழ பாக்கெட் உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.அதேபகுதியில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் படித்த 53 மாணவிகள்,32மாணவர்களுக்கு மடிகணினியுடன் சான்றிதழ்கள், தையல் பயிற்சி முடித்த 320 பெண்களுக்கு தையல் இயந்திரங்களுடன் சான்றிதழ்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார். தமிழ்நாடு செய்தித்தாள் கலைஞர் கண் மருத்துவமனையில் பரிசோதனை செய்த 200 பேருக்கு கண் கண்ணாடிகள், புத்தாடைகளை வழங்கினார். இதைத் தொடர்ந்து, தீட்டி தோட்டம் முதல் தெருவில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் புதிய கழிவுநீர் உந்து நிலையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், வடசென்னைவளர்ச்சி திட்டத்தின் கீழ் கொளத்தூர் தொகுதியில் உள்ள பல்வேறு கழிவுநீர் உந்து நிலையத்தில்ரூ.12.48கோடியில் மின்னியல், இயந்திரவியல் கட்டிட கட்டமைப்புகளை மேம்படுத்தி வலுப்படுத்தப்பட்ட பணிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து ஜவகர்நகர் 2வது வட்ட சாலையில், மாநகராட்சி சார்பில் புதிதாக கட்டப்பட்ட பெண்கள் உடற்பயிற்சி கூடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், ஜவகர் நகர் முதல் சர்க்குலர் சாலையில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் கட்டப்படட நவீன நூலகம், முதல்வர் படைப்பகத்தையும் திறந்து வைத்தார். மேலும்,பேப்பர்மில்ஸ் சாலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் புதிதாக கட்டப்பட்ட நவீன அங்காடியை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து கொளத்தூர், சீனிவாசா நகர் 3வது தெருவில் சென்னை மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின்திறந்து வைத்தார்.Urban Transit

இதில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா,எம்பிக்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், தாயகம் கவி எம்எல்ஏ, துணைமேயர்மகேஷ்குமார், சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன்,பொது நூலக இயக்குநர் ச.ஜெயந்தி, சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர். சந்திரசேகர் சாகமூரி, மண்டலக்குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் ஐசிஎப் முரளி, நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மகேஷ்குமார், சந்துரு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாட்டையும் அரசியலமைப்பையும் அவமதித்த திரிணமூல் காங்கிரஸ்; பிரதமர் மோடி கண்டனம்



மேற்கு வங்காளத்திற்கு பயணம் மேற்கொண்ட இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு அம்மாநில அரசு உரியப் பாதுகாப்பு மற்றும் மரபுரீதியான வரவேற்பு (Protocol) அளிக்கத் தவறியதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாகப் பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக வலைதளப் பக்கத்தில் மேற்கு வங்கத்தின் திரிணாமுல் காங்கிரஸ் (TMC) அரசை மிகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

சிலிகுரியில் நடைபெற்ற 9-வது சர்வதேச சந்தாலி (Santal) மாநாட்டில் பங்கேற்கக் குடியரசுத் தலைவர் சென்றிருந்தார். ஆனால், இந்த மாநாட்டிற்காக முதலில் ஒதுக்கப்பட்ட இடமான பிதான்நகரில் (Bidhannagar) இருந்து, கடைசி நேரத்தில் கோசைன்பூர் (Gosainpur) என்ற சிறிய இடத்திற்கு அம்மாநில நிர்வாகம் மாற்றியது.

இது பழங்குடியின மக்கள் அதிக அளவில் பங்கேற்பதைத் தடுக்கும் முயற்சி எனப் பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டின் முதல் குடிமகன் ஒரு மாநிலத்திற்கு வரும்போது, அம்மாநில முதலமைச்சர் அல்லது அமைச்சர்கள் நேரில்வந்துவரவேற்பது மரபு. ஆனால், முதலமைச்சர் மம்தா பானர்ஜி மற்றும் அவரது அமைச்சர்கள் எவரும் குடியரசுத் தலைவரைச் சந்திக்க வரவில்லை. இது ஒருநாட்டின் குடியரசுத் தலைவருக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அவமானம் எனப் பிரதமர்மோடி தெரிவித்துள்ளார்.

இது வெட்கக்கேடானது மற்றும் முன்னெப்போதும் இல்லாத ஒன்று. பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் வெளிப்படுத்திய வேதனையும் மன உளைச்சலும் இந்திய மக்களின் மனங்களில் ஆழமான சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.திரிணாமுல்அரசுஅனைத்து எல்லைகளையும் மீறிவிட்டது எனப் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் பதவி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது. அதன் புனிதத்தன்மை எப்போதும் மதிக்கப்பட வேண்டும். சந்தாலி கலாச்சாரம் போன்ற மிக முக்கியமான விஷயத்தை மேற்கு வங்க அரசு இவ்வளவு அலட்சியமாக நடத்துவது துரதிர்ஷ்டவசமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் அவர்களே தனது உரையில், மம்தா பானர்ஜி எனது தங்கை போன்றவர்;அவர் ஏன் கோபமாக இருக்கிறார் எனத் தெரியவில்லை என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட நிலையில், இந்த விவகாரம் தற்போது தேசிய அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**



Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஐக்கிய ஜனதா தளத்தில் இணைந்தார் நிதீஷ் மகன் நிஷாந்த்



2005-ஆம் ஆண்டு முதல்பிகார்மாநிலமுதலமைச்சராக இருந்து வருகிறார் நிதிஷ் குமார். 2014- ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் ஐக்கிய ஜனதா தளத்தின் மோசமான தோல்வி காரணமாக 9 மாதங்கள் முதலமைச்சர் பதவியை ஜிதன் ராம் மஞ்சியிடம் ஒப்படைத்திருந்தார். அதன் பிறகு தொடர்ந்து முதலமைச்சர் நாற்காலியை அலங்கரித்து வருகிறார்.

அடிக்கடி கூட்டணிகளை மாற்றி இரண்டு முறை ராஷ்ட்ரிய ஜனதா தள கூட்டணிக்கு சென்றுவிட்டு மீண்டும் பாஜகவுக்குத் திரும்பினார். ஐக்கிய ஜனதாதளம் கட்சி மாநிலத்தில் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்து வந்தபோதிலும், நிதிஷ் குமார் தான் பிகார் முதலமைச்சராக இருப்பார். கடந்த ஆண்டு பிகாரில் நடந்த தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களில்வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இதில் பாஜக மட்டும் 89 இடங்கள் வென்றது. நிதிஷ் குமார் கட்சி 84 தொகுதிகளை கைப்பற்றியது.

பாஜக தனிப்பெரும்பான்மை கட்சியாக உருவெடுத்தாலும் ஆட்சி அதிகாரத்தை நிதிஷ் குமார் கையில் ஒப்படைத்தது. இதற்கு காரணம் தேர்தலுக்கு முன், நிதிஷ் குமாரை முதலமைச்சர் வேட்பாளர் என அறிவித்து பரப்புரை மேற்கொண்டதுதான். ஆனால் இப்போது அவர் தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் டெல்லி அரசியலை நோக்கி நகர்கிறார். இதற்காக அவர் மாநிலங்களவை தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

கடந்த சில ஆண்டுகளாகவே நிதிஷ் குமாரின் உடல்நிலை குறித்த தகவல்கள் விவாதங்களை ஏற்படுத்தி வருகின்றன. 75 வயதாகும் அவருக்கு, மாநில நிர்வாகத்தின் கடும் அழுத்தத்தைக் குறைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும்,பிகாரில் நீண்டகாலமாக நிதிஷ் குமாருக்கு ஆதரவு அளித்து வரும் பாஜக, இப்போது அங்கு தனது சொந்த முதலமைச்சரை அமர்த்த விரும்புகிறது. நிதிஷ் குமார் விலகுவதால்,பிகார் வரலாற்றில் முதல்முறையாக பாஜகவைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராகப் பதவியேற்பார்.

இந்தபட்டியலில்முன்னணியில் இருப்பது தற்போது பிகார் மாநிலத்தின் துணை முதலமைச்சராக இருக்கும் சாம்ராட் சவுத்ரி. அடுத்தபடியாக பிகார் மாநில அமைச்சராக இருக்கும் திலிப் குமார் ஜெய்ஸ்வாலுக்கும் முதலமைச்சராகும் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

மாநிலத்தில் இருந்து டெல்லி அரசியல்நோக்கி நிதிஷ் நகர்ந்தாலும், மாநிலத்தில் தனது பிடி எப்போதும் இருக்க வேண்டும் என்பதுபோல், தனது மகனை அரசியலுக்குள் கொண்டுவந்துள்ள நிதிஷ் குமார். இத்தனை வருடங்களாக கட்சியில் உறுப்பினராகக்கூட இல்லாமல் இருக்கும் நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார் இன்று ஐக்கிய ஜனதா தளம் கட்சியில் இணைந்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நிஷாந்த் குமார், "அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் என் மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்ற முயற்சிப்பேன். கடந்த 20 ஆண்டுகளில்என்தந்தை செய்ததை நினைத்து நான்,முழு பிகார் மற்றும் முழு நாடும் பெருமைப்படுகிறோம்" எனத் தெரிவித்துள்ளார். மேலும், நிஷாந்த் குமாரும் நிதிஷ் குமாரைபோலவே,பிகார் சட்டமேலவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட பின்னர் துணை முதலமைச்சராக பதவியேற்பார் என தெரிகிறது.



அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதல்வர் முனைவர் வசந்தியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி மற்றும் ஏவிஎம் காலிபரேஷன் லேப் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவிச்சி மெய்யப்பன் ஆகியோர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி உதவி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த பயிற்சி ஆகியவை மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்ட இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டியின் தலைவர் சுந்தரராமன் மற்றும் , வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம், தமிழ்துறைத்தலைவர்முனைவர்சிதம்பரம்,இயற்பியல்துறைத்தலைவர்பேராசிரியர்கவிதாஆகியோர்உடன்இருந்தனர்.

### சிவகங்கை மாவட்டம் காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில்

## உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வீரமங்கை விருது வழங்கும் நிகழ்ச்சி மற்றும் மகளிருக்கான மருத்துவ முகாம்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராயச்சி மையம்,

காரைக்குடி ரோட்டரி சங்கம்,காரைக்குடிசமூக ஆர்வலர்கள் மற்றும் கானல் கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து ஞாயிற்றுக்கிழமை காலை நடத்தியது .மிகப்பெரிய அளவில் பெண்களுக்கான இலவசமருத்துவமுகாம் . காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெற்றது, இதில் பெண்களுக்கானபல்வேறுபரிசோதனைகள் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது .

மேலும், இலவச கண் மருத்துவ முகாமும் நடைபெற்றது

நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக காரைக்குடி சுற்றியுள்ள பகுதிகளில் பல்வேறு துறைகளில் திறன்பட பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் சாதனைபடைத்தபெண்களுக்கு வீரமங்கை விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மருத்துவமனை சேர்மன் மருத்துவர் குமரேஷன் அனைவரையும் வரவேற்றார்,ரோட்டரிகிளப் தலைவர் லோகநாதன், கானல் கண் மருத்துவமனைமேலாளர்,சிறப்புரையாற்றினர், மாநகராட்சி துணை மோயர் குணசேகரன், தொழில் அதிபர் கோடீஸ்வரி , குளோபல் மருத்துவமனை இயக்குனர் விவேகானந்தன்.

நிகழ்வில்காரைக்குடியில் உள்ள தொழிலதிபர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள் சமூக ஆர்வலர்கள்,பொதுமக்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு மருத்துவமனை நிர்வாக இயக்குனர்கள்,மக்கள் தொடர்பு அலுவலர்கள், மருத்துவர்கள்,செவிலியர்கள். நிகழ்ச்சி தொகுப்பு ஸ்ரீதர் ஆகியோர் கல ந்து கொண்டனர்.

### புரட்சி பாரத கட்சி கோரிக்கை: உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் கிராமப்புறத்தில்

## 50க்கும் மேற்பட்ட நூலகம் கட்டிடம் மறு சீரமைப்பு செய்தும் இரண்டு ஆண்டு மேலாக பூட்டிய நிலை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படுமா?






ஆகஸ்ட்26,2023அன்று, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கிராமப்புறங்களில் உள்ள நூலகங்களை மறுசீரமைக்க முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். இந்தத் திட்டத்தின்முக்கியஅம்சங்கள் பின்வருமாறு:

ஊரக நூலகங்கள் மறுசீரமைப்பு: தமிழ்நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் செயல்படாமல் இருந்த அல்லது பழுதடைந்த நிலையில் இருந்த சுமார் 1000 க்கும் மேற்பட்ட கிளை நூலகங்கள் மற்றும் ஊர்ப்புற நூலகங்களை உடனடியாகப் புனரமைக்க உத்தரவிடப்பட்டது.

நவீனமயமாக்கல்: நூலகங்களில் வெறும் புத்தகங்கள்மட்டுமின்றி, நவீன வசதிகளுடன் கூடிய கணினி அறைகள் மற்றும் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. நிதி ஒதுக்கீடு: இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டிடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர் நலன்: குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் போட்டித்தேர்வுகளுக்குத் தயாராவதற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் இதழ்களைக் கையிருப்பில் வைக்க உத்தரவிடப்பட்டது. பயன்பாட்டைக் கூட்டுதல்: நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த நூலகங்களைத் திறந்து, அவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று தமிழக அரசு அறிவுத்தும்நூலகம்கட்டிடம்மறுசீரமைப்புபட்டு இரண்டு ஆண்டுகள் மேலாகயும் இதுவரைக்கும் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வராமல் பூட்டிய நிலையில் இருக்கின்றது பொதுமக்கள் நலனை கருதி உடனடியாக தமிழக அரசு மாவட்ட நிர்வாகமும் புத்தகங்கள் கணினி டேபிள் சேர் நூலகத்துக்கு தேவையான அனைத்து பொருட்களும் கொண்டு வந்து விரைவில் நூலகத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று புரட்சி பாரதம் கட்சி கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K. ஏழுமலை கோரிக்கை வைத்துள்ளார்



கடலூர்மாவட்டம்வேப்பூர்அடுத்துள்ளஐவதுகுடியில்உள்ளஸ்ரீஐயப்பாமற்றும்ஐயப்பாபாலிடெக்னிக்கல்லூரிகளில் மாணவர்களுக்கான பணி நியமன ஆணை மற்றும் கூடுதல் தொழில் திறன் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் விழா சனிக்கிழமை (மார்ச் 7) காலை கல்லூரியின் யோகா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்த விழாவில், ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் வெங்கடேசன் வரவேற்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் மற்றும் நிர்வாகத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.

## பூமிக்கு துணையாய் பிறந்தவள் நீ

பல்லவி
பூமிக்குத் துணையாய் பிறந்தவள் நீ
எந்த சாமிக்கும் இணையாய் இருப்பவள் நீ.
உயிர்களைச் சுமக்கும் உன்னதம் நீ.
என்றும் உன்னை நினைத்திட மறந்தவள் நீ.
மலரேஇரும்புமலரேதுணிவே.என்றும்துணையே.

சரணம்1.
உன்னால் மனித குலம் தழைக்கும்.
உன் அமுதால் பல உயிர் பிழைக்கும்.
பெண்ணால் உலகம் பெருமை கொள்ளும்.
பல சோதனையை உந்தன் பொறுமை வெல்லும்.
உடலினை உருக்கி உழைப்பவளே..
இந்த உலகினை அன்பால் காப்பவளே.

சரணம்2.
எல்லா உயிர்களும் உனை வணங்கும்.
உன் தாலாட்டு இசையில் அமைதி கொள்ளும்.
உலகின் அழகி தாய்தானம்மா..
பெரும் உறவை வளர்ப்பது பெண் தானம்மா.
உன் காலடி படும் இடம் பூ வனமே..
உன் கை படும் பொருள்களில் பூமணமே.



Dr. R.சிவகுமார்
இ.கா.ப.
காவல் இணை ஆணையர்,
ஆவடி காவல் ஆணையரகம்

இதை இசை வீடியோவாகக் கேட்க இந்த QR Code ஸ்கேன் செய்யவும்




### ரூ.5.65 லட்சத்தில் 7 பேர் அமரும் வகையில்

## அசத்தலான நிஸான் கிராவைட் கார் வகைகள் கோவையில் அறிமுகம்

சிறந்த மைலேஜ் மற்றும் நவீன தொழில்நுட்ப அம்சங்களுடன் அறிமுகமாகி உள்ள கிராவைட் முன்பதிவுகள் துவங்கி உள்ளதாக கோவை இ.வி.எம்.நிஸான் ஷோரூம் நிர்வாகம் தகவல்

நிசான்மோட்டார்இந்தியா,தனதுபுதிய7சீட்டர் காரான நிசான் கிராவைட்எனும்புதியமாடல் காரை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிலையில் புதிய நிஸான் கிராவைட் கார் அறிமுக விழா கோவை சங்கனூர் சாலையில் உள்ள இ.வி.எம்.நிஸான் கோயம்புத்தூர் ஷோரூமில் நடைபெற்றது..

நிகழ்ச்சியில், நிஸான் இந்தியாவிற்பனைபிரிவு பொது மேலாளர் சவுரப் பாசின்,ஏரியாமேனேஜர் பிரபு பக்தவத்சலம் மற்றும் இ.வி.எம்.நிஸான் பொது மேலாளர் சபரி நாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு புதிய நிஸான்கிராவைட்காரை அறிமுகம் செய்தனர்..

இந்நிகழ்ச்சியில். நிஸான் மோட்டார்ஸ் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்..

சிறந்த மைலேஜ் மற்றும் நவீன தொழில்நுட்ப அம்சங்களுடன் சந்தைக்கு வந்துள்ள கிராவைட்காரைமுதல்ஐயாயிரம் வாடிக்கையாளர்களுக்கு ஆரம்ப விலையாக ரூபாய் .5.65 லட்ச ரூபாய், எக்ஸ்–ஷோரூம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது, வடிவமைப்பில் கிராவைட், நிசான் நிறுவனத்தின் அடையாளமாக இருக்கும் வீ–மோஷன் கிரில் வடிவத்தை கொண்டுள்ளது. முன்புறத்தில் மெல்லிய எல்இடி ஹெட்லைட்கள் மற்றும் டே டைம் ரன்னிங் லைட்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் புதிய 15 இன்ச் அலாய் வீல்கள் மற்றும் ரூஃப் ரெயில்கள் மற்றும் பின் பக்கத்தில் கூர்மையான டெயில் லைட்கள், நடுவில் நிசான் லோகோ மற்றும் குரோம் ஸ்ட்ரிப் போன்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஐந்து வண்ணங்களில் சந்தைக்கு வந்துள்ள புதிய நிஸான் கிராவைட் பட்ஜெட் கார் பிரியர்களை கவரும் வகையில் குறைந்த விலையில்அதேசமயம்7 சீட்டர்,நவீன வசதிகளுடன் அறிமுகமாகி உள்ளது குறிப்பி டதக்கது.

### தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக

## சர்வதேச மகளிர் தினம் அன்னம்மாள் கல்வியியல் கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது



மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக நலத்துறை சார்பாக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 13 கல்லூரிகளில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றில் வெற்றி பெற்றமாணவ,மாணவியர்களுக்கு இவ்விழாவில் பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேலும்சகாகலைக்குழுவினரால் நாட்டுப்புற இசை நிகழ்ச்சி மூலம் பெண்களுக்கான பாதுகாப்பு, பெண்களின் உரிமைகள்,குழந்தைதிருமணத் தடுப்பு உள்ளிட்ட தலைப்புகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி பிரேமலதா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புஅலுவலர் செல்வி அனுஷியா, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் ரூபி ஃபர்னாண்டோ மற்றும் திலகா, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் நிவேதிதா, கல்லூரி முதல்வர் முனைவர் ஜாய்ஸ்லின் ஷர்மிளா, முனைவர் எஸ். ஜெயபார்வதி, முனைவர் என். சுதா குமாரி, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்கள் எதையும் சாதிக்க முடியும் என்ற மன உறுதியுடன் செயல்பட வேண்டும்

## உலக மகளிர் தின விழாவில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசினார்





தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவிற்கு மாநகராட்சி ஆணையர் பிரயங்கா தலைமை வகித்தார். உதவி பொறியாளர் அனுசௌந்தர்யா வரவேற்புரையாற்றினார். விழாவில் மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்களுக்குப் பரிசுகளை வழங்கி னார்.

பின்னர் விழாவில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: தூத்துக்குடி மாநகராட்சியில் ஆண்களுக்கு நிகராக 32 பெண் மாமன்ற உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். மேலும் நகரில் பெண்கள் அச்சமின்றி நடமாடுவதை உறுதி செய்யப்பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு நள்ளிரவில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் வாகனப் பேரணியின் போது, பெண்கள் அதிக அளவில் இருசக்கர வாகனங்களில் பாதுகாப்பாகச் சென்று வந்ததைக் கண்டேன். இதுவே நகரின் பாதுகாப்பு நிலைக்குச் சான்றாக உள்ளது.

முன்பு 3 பூங்காக்கள் மட்டுமே இருந்த தூத்துக்குடியில், தற்போது 53 புதிய பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வ.உ.சி கல்லூரி அருகே நமக்கு நாமே திட்டத்தின் கீழ், கனிமொழி எம்.பி. அவர்களின் ஆலோசனையின்படி பெண்களுக்கெனத் தனிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அங்கு யோகா, ஜிம் மற்றும் நடன வகுப்புகள் நடைபெறுகின்றன. அதேபோல், மாநகராட்சியின் 21 பள்ளிகளிலும் பெண் தலைமை ஆசிரியர்களே பணியாற்றி வருகின்றனர். சமீபத்தில் பணியமர்த்தப்பட்ட 67 பணியாளர்களில் பெரும்பாலானோர் பெண்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே பெண்கள் எதையும் சாதிக்க முடியும் என்ற மன உறுதியுடன் செயல்பட வேண்டும். உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க மாநகராட்சி ஏற்படுத்தியுள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தூத்துக்குடியை மாசு இல்லாத நகரமாக மாற்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என்று அவர் பேசினார். தொடர்ந்து மேயர் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்.

விழாவில் பெண்களின் ஆரோக்கியம் குறித்து ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் செல்வ சுந்தர வினோஜின், நிதி மேம்பாடு குறித்து வங்கி மேலாளர் ரத்தினவள்ளி, பெண்களுக்கான சட்டங்கள் குறித்து சிவிஜா ஆகியோர் விழிப்புணர்வு உரையாற்றினர்.

விழாவில் மண்டலத் தலைவர்கள் கலைச்செல்வி, அன்னலட்சுமி, நகர் நல அலுவலர் சங்கர்மணி, உதவி செயற்பொறியாளர்கள் முனீர் அகமது, ராஜேஷ்கண்ணா, சுதாதார அலுவலர்கள் ஹரிகணேஷ், ராஜசேகர், கொளரி இளநிலை உதவி பொறியாளர்கள் ராஜவி நித்யகல்யாணி ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி, மின்வாரிய தொழிற்சங்க தலைவர் பேச்சிமுத்து, மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ், போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், ஜேஸ்பர் உள்பட அரசுத்துறை அலுவலர்கள் மாமன்ற உறுப்பினர்கள் தூய்மை பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் சுகாதார ஆய்வாளர் அழகுலட்சுமி நன்றியுரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் அமைந்துள்ள மறைந்த பழம் பெறும் நடிகையும்,திரைப்பட பின்னணிப் பாடகியுமான பத்ம ஸ்ரீ கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் திருஉருவச் சிலையை காணொளிகாட்சிவாயிலாகதிறந்துவைத்தார்.அதனைதொடர்ந்துஅமைச்சர்கள்சு.முத்துசாமி,மு.பெ.சாமிநாதன்,ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி. சந்திரகுமார் மற்றும் கே. பி .சுந்தராம்பாள் அவர்களின் குடும்பத்தார்,கழக மாநில ,மாவட்ட, ஒன்றிய கழக,பேரூர் கழக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செய்தனர்.



தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் என்.கே.கே.பி.ராஜா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது இல்லத்திற்கு நேரில் சென்று ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் நைல் அ.ராஜா சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

# குடிமைப் பணி தேர்வில் காஞ்சி நெசவாளர் மகன் வெற்றி!



மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2025-ம் ஆண்டுக்கான அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளனர். இதில் காஞ்சிபுரத் தைச் சேர்ந்த கிருபாகரன் தேசிய அளவில் 439-வது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். காஞ்சிபுரம் நாராயணப் பாளையம் தெருவைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளி நடராசன் ஜெயலட்சுமி தம்பதியின் மகன் கிருபாகரன், தற்போது தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் கணக்காளராகப் பணியாற்றி வருகிறார். அரசுப் பணியில் இருந்து கொண்டே ஐ.ஏ.எஸ் அதிகாரியாக வேண்டும் என்ற லட்சியத்துடன் குடிமைப் பணித் தேர்வுகளை எழுதி வந்த இவர், 2025ம் ஆண்டு நடை பெற்ற தேர்வில் நாடு முழு வதும் தேர்வான 958 நபர்களில் ஒருவராக 439-வது இடத்தைப் பிடித்து வெற்றி பெற்றுள்ளார்.

தனது இந்த வெற்றி குறித்துப் பேசிய கிருபாகரன், எளிய பின்னணியில் இருந்து வந்த தனக்குத் தமிழக அரசின் 'நான் முதல் வன்' திட்டம் உதவியாகவும் இருந்ததாகத் தெரிவித்தார். நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர், தனது விடாமுயற்சியால் அகில இந்திய அளவில் சாதித் திருப்பது காஞ்சிபுரம் மக்களிடையே பெரும் மகிழ்ச்சியையும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களிடையே புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.




# தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக சார்பு அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு

தமிழக துணை முதல்வரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.136 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவமனை கட்டிடத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து தூத்துக்குடி சத்யா

பார்க்ரிச்சார்டில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட சார்பு அணி சந்திப்பு நிகழ்ச்சி தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடை பெற்றது. கூட்டத்தில் தேர்தல் பணிகள், பிரசாரம், திமுக அரசின் திட்டங்களை மக்களிடம் தெரிவித்து மீண்டும் திமுக ஆட்சி அமைக்க உழைப்பது குறித்து ஆலோசனைகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளரும், திருச்செந்தூர் நகர் மன்ற 2வது வார்டு உறுப்பினருமான எஸ்.ஏ.செந்தில்குமார் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன் மற்றும் சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

# சேர்வைக்காரன் மடம் ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டும் பணி

## ஒட்டப்பிடாரம் எம்.எல்.ஏ. சண்முகையா அடிக்கல்நாட்டி தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் சேர்வைக்காரன் மடம் ஊராட்சி செந்தியம்பலம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணிகளை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம். சி.சண்முகையா அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சக்கம்மாள் புரம் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ரூ.9.85 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலைக்கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை சண்முகையா எம்எல்ஏ வழங்கி பேசுகையில்; தமிழ்நாடு முதலமைச்சர் முக. ஸ்டாலின் ஆட்சியில் மக்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மகளிர்க்காண சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பலனடைந்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் நல்ல முறையில் தங்களின் ஒத்துழைப்பை வழங்குவது மகிழ்ச்சியளிக்கிறது. அதன் பலனாக மிகக் குறுகிய காலத்தில் இந்த ரேஷன் கடை சிறப்பாக மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. தொடர்ந்து மக்கள் தங்களது ஆதரவை திமுக அரசுக்கு தர வேண்டும் என சண்முகையா எம்எல்ஏ கேட்டுக்கொண்டார். தொடர்ந்து மரக்கன்றுகளை எம்எல்ஏ நட்டு வைத்தார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, சின்னதுரை உதவி பொறியாளர் ரவி, தூத்துக்குடி மத்திய ஒன்றிய துணை செயலாளர்கள் ஹரி பாலகிருஷ்ணன், ஏஞ்சலின் ஜெனிட்டா, தெற்கு மாவட்ட பிரதிநிதி மாரிசெல்வம், மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆறுமுகம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சண்முகநாராயணன்

ஒன்றிய கலை இலக்கிய அணி அமைப்பாளர் பொன்னரசு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வசந்த், கிளை செயலாளர்கள் மைக்கேல், சுகுமார்

மற்றும் ஞானசேகர் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழக வாழ்வுரிமை கட்சி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தலைவர் கே. ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் பொருளாளர் மாதேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஈரோட்டில் உள்ள வாசன் ஐகேர் மருத்துவமனையுடன் இணைந்து ஈரோடு மாநகர் வீரப்பன் சத்திரம் SMBV பள்ளியில் இலவச மருத்துவமுகாமைநேற்றுநடைபெற்றது.இம்முகாமில்200க்கும்மேற்பட்டோர்பொதுமக்கள்கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# சிறந்த காவல் நிலையமாக விருத்தாசலம் காவல் நிலையம் தேர்வு



கடலூர் மாவட்டத்தில் வழக்குகளை பதிவு செய்தல், குற்றவழக்கு களை இறுதி அறிக்கை விரைந்து சமர்ப்பித்தல், வழக்குகளை நீதிமன்ற கோப்புக்கு எடுத்தல், இ-ஃபைலிங் செய்தல், காயச்சான்று பெறுதல், கஞ்சா, குட்கா, லாட்டரி, மணல் திருட்டு ஆகிய வழக்குகளை பதிவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றசம்பவ பணிகளை சிறப்பாக செய்தமைக்காக சிறந்த உட்கோட்டமாக விருத்தாச்சலம் உட்கோட்டம் மற்றும் சிறந்த காவல் நிலையமாக விருத்தாசலம் காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 மாதங்களில் 6 முறை விருத்தாசலம் உட்கோட்டம் மாவட்டத்திலேயே சிறந்த உட்

கோட்டமாகவும், 6 முறை மாவட்டத்திலேயே சிறந்த காவல்நிலையமாகவும், 8 முறை விருத்தாசலம் அனைத்துமகளிர் காவல் நிலையம் மாவட்டத்திலேயே சிறந்த காவல் நிலையமாகதேர்ந்தெடுக்கப்பட்டள்ள து. இதனை மாதாந்திர குற்றக்குழு கூட்டத்தில்,

மாவட்ட எஸ்பி ஜெயக்கு மார்விருத்தாசலம் துணை காவல் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் மற்றும் விருத்தாசலம் காவல் ஆய்வாளர் பிரதாப் சந்திரன் ஆகியோரை பாராட்டி சான்றிதழ் வழங்கினார். இதில் காவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

# ஓ.பன்னீர்செல்வம் இன்னொரு கட்சியில இணைந்துட்டாங்க, இனி வந்து அ.தி.மு.கவுக்கும், அவருக்கும் தொடர்பு இல்லை

## ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. பேட்டி



சர்வதேச மகளிர் தின விழா மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மதுரை பசுமலையில் திருப்பரங்குன்றம் எம்எல்ஏ ராஜன் செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தால்எம்எல்ஏ ராஜன் செல்லப்பா கூறுகையில்:

தமிழகத்தின் மகளிர் அத்தனை பேரும் இன்றைக்கு முழக்கமிட்டு இருக்கிறார்கள். ஏனென்றால் இந்த அரசு பாதுகாக்கிற வகையற்ற சூழல் இருக்கிற காரணத்தால், நமக்கு நாமே பாதுகாப்பு, திமுகவை நம்பினால் மகா தப்பு என்ற வாசகங்களோடு இந்த மகளிர் அணி திருவிழா சிறப்பாக தொடங்கி இருக்கிறது.

அவர்களுக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர், இனிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பல்வேறு பிரச்சாரங்களை ஈரோடு மாவட்டத்திலே, கோவை மாவட்டத்திலே மேற்கொண்டிருக்கிறார்கள். அதில் மகளிருக்கான பல்வேறு நலத்திட்டங்களைச் சொல்லியிருக்கிறார். மீண்டும் அனைத்து மகளிருக்கும் ஸ்கூட்டர் வழங்குகிற திட்டம், தாலிக்குத்தங்கம் வழங்குகிற திட்டம்,பல்வேறு வகையான மகளிருக்கான திட்டங்களை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்தத் திட்டங்களை மக்கள் மத்தியிலே பரப்புவதற்கான பணியினை அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இங்கே வந்திருக்கிற பல்வேறு பயனாளிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

ஓ.பி.எஸ் மதுரையில் இணைப்பு விழா குறித்த கேள்விக்கு:*

மதிப்பிற்குரிய 'கண்ணீர் செல்வம்' என்கிற அவர் ஒரு செல்லாத நோட்டு. அவர் ரிசர்வ் பேங்க்ல இருந்தா என்ன, ஸ்டேட் பேங்க்ல இருந்தா என்ன, முடிந்துபோன வரலாறு. அவரைப் பற்றி நாங்க அதற்குமேல் விமர்சிக்க விரும்பவில்லை. அதுவும் இன்னொரு கட்சியில இணைந்துட்டாங்க, இனி வந்து அண்ணா திமுகவுக்கும் அவருக்கும் தொடர்பு இல்லை. மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் அனைத்துத் தடைகளையும் நீக்கி வெற்றிகரமான பயணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார். ஏனென்றால் வரிசையா எடுத்துப் பாத்தீங்கன்னா எவ்வளவோ சோதனைகள், எவ்வளவோ எதிர்ப்புகள் அத்தனையும் முறியடித்து ஒரே தலைவராக, வெற்றித் தலைவராக இதுவரை தோல்வியே ஏற்படுத்தாதவராக உருவெடுத்துவிட்டார். இனிமேல் அண்ணா திமுக வெற்றிக் களத்தை நோக்கிச் செல்ல இருக்கிறது.வெற்றியின் தலைவன் மாண்புமிகு எடப்பாடிபழனிசாமிஎன்பதை மட்டும் இந்த இடத்தில் சொல்லிச் சொல்ல வருகிறேன்

தவெக தலைவர் விஜய் மகளிருக்கான அறிவிப்புகள் குறித்த கேள்விக்கு

ஆட்சிக்கு வரப்போகிற கட்சி அனைத்திந்திய அண்ணா திமுக. அது கொடுக்கிற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

ஸ்டாலின் எடப்பாடி பழனிசாமி அவர்கள் நிதீஷ் குமார் மாதிரியே பாஜக அரசுடன் இணைஞ்சிருவாருன்னு கூறியது குறித்த கேள்விக்கு:*

அவர் கேலியா சொன்னாலும் கூட அனைத்திந்திய அண்ணாதிமுகவின் முதலமைச்சராக எடப்பாடியார் வரப்போகிறார் என்பதைத்தான் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். நிதீஷ் குமார் மாதிரி வாழ்நாள் முழுக்கப் போராடி அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு மிகப்பெரியராஜதந்திரம் இருக்கிறது. அவர் எந்த நேரத்தில்எப்படி யாரைப் பயன்படுத்தி அண்ணா திமுகவைக்கட்டிக்காக்க வேண்டும் என்பதை நன்குஅறிந்தவர்.ஆகவே அவர் யாரிடமும் ஏமாற மாட்டார். அண்ணா திமுகவை புரட்சித் தலைவி அம்மா கைக்காட்டிய வழியில் கட்டிக்காத்து இதுவரைஎத்தனையோ சோதனைகளை ஜெயித்து வந்துட்டார். தொடர்ந்துவெற்றிபெறுவார், இனிமேல் வெற்றிதான், வெற்றிமேல் வெற்றி அண்ணாதிமுகவுக்கு.





தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 78 ஆம் ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு ஈரோடு மாநகர் மாவட்டம் கிருஷ்ணம்பாளையம் பகுதிக்கு உட்பட்ட பிபி அக்ரஹாரத்தில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நேற்று நடைபெற்றது.இம் முகாமிற்கான ஏற்பாட்டினை அஇஅதிமுக ஈரோடு மாநகர் மாவட்டம் பெரியார் நகர் பகுதி கழக செயலாளரும் முன்னாள் மண்டல தலைவருமான இரா.மனோகரன் செய்திருந்தார். இம்முகாமில் சுற்று வட்டார பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



உலக மகளிர் தின கொண்டாட்டத்தையொட்டி, ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் தமிழக வெற்றிக் கழகம் இலவச மருத்துவ முகாமை ஏற்பாடு செய்துள்ளது. கட்சியின் மாவட்டச் செயலாளர் விஜய்பாலாஜி, மண்டலச் செயலாளர் எஸ்.கார்த்தி, பொருளாளர் பரத், இணைச் செயலாளர் ஏ.வினோத், நிர்வாகிகள் அசோக் குமார் , அருண்குமார் மற்றும் கே.பாலாஜி ஆகியோர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.இந்த நிகழ்வில் மகளிர் அணியினர் சுதா , விமலா, பிரியங்கா,லீலா, கவிதா, பரமேஸ்வரி ராதிகா,சித்ரா ஆகியோர் கலந்து கொண்டனர். இம்முகாமில் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஈரோடு லக்காபுரத்தில் உள்ள மரிய நிவாஸ் முதியோர் இல்லத்தில் அன்னை தெரசா அறக்கட்டளை சார்பில் நெகிழ்ச்சியான விழா கொண்டாடப்பட்டது. அறக்கட்டளை மாவட்டத் தலைவர் கனகராஜன் தலைமையில், கௌரவத் தலைவர் அரிமா அன்பழகன் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் ராஜப்பா மற்றும் முன்னாள் மாவட்டத் தலைவர் திருச்செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர். இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களுடன் இணைந்து கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி மகளிர் தின வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்ட அவர்கள், இனி வரும் ஒவ்வொரு விசேஷ நாட்களிலும் இதேபோல் முதியோர்களுடன் வந்து கொண்டாடுவோம் என நெகிழ்ச்சியுடன் உறுதியளித்தனர். இந்நிகழ்வில் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஈரோடு மாநகர் மரப்பாலம் பழக்கார வீதியில் உள்ள மஹாலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. அக்கட்சியின் பகுதிச் செயலாளர் சாதிக் பாஷா ஏற்பாட்டில் நடைபெற்ற இதில், ஹஜரத் மூசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். மாநகர மாவட்டச் செயலாளர் விஜய் பாலாஜி உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்று நோன்பு திறக்கும் நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் உலக மகளிர் தின விழா





ஈரோடு ஷேக் தாவூத் வீதியில் உள்ள அரசு அலுவலர் ஒன்றிய கூட்ட அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்டத் தலைவர் வி.எம். வெங்கிடுசாமி தலைமை தாங்கி உரையாற்றினார். மாநில மண்டல மகளிர் அணி செயலாளர் செ.வசுமதி முன்னிலை வகித்து விழாவினைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவிற்கு பெரியார் பதிப்பக வாசகர் வட்டம் தலைவர் அனிச்சம் கனிமொழி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதனைத் தொடர்ந்து மகளிர் முன்னேற்றம் மற்றும் சமுதாயத்தில் பெண்களின் முக்கியத்துவம் குறித்து நடைபெற்ற நிகழ்ச்சியில், "பெண்மையின் மகத்துவம்" என்ற தலைப்பில் டாக்டர்.மகாலட்சுமி பெண்ணியத்தின் சிறப்புகளையும், சமுதாய மாற்றத்தில் பெண்களின் பங்களிப்பையும் விளக்கிப் பேசினார். அதனைத் தொடர்ந்து, "குடும்ப அமைதிக்கு பெண்களின் பங்கு" என்ற தலைப்பில் ஸ்கை ப்ரொபசர் ஏ.ஆர். பரணி மற்றும் யோகா ஆசிரியர் ஆர். பரிபூரணம் ஆகியோர், இன்றைய வேகமான சூழலில் மன அமைதியுடனும் ஆன்மீக விழிப்புணர்வுடனும் குடும்பத்தைப் பெண்கள் எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்பது குறித்து விரிவாக உரையாற்றினர். பெண்களின் உரிமையைப் போற்றும் வகையிலும், அவர்களின் மகத்துவத்தைப் பறைசாற்றும் வகையிலும் அமைந்த இந்த விழாவில், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, வட்ட மற்றும் கிளை நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.தொடர்ந்து மகளிர் தின விழாவில் கலந்து கொண்ட மகளிர்கள் அனைவருக்கும் அசைவ விருந்து வழங்கப்பட்டது.விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## சர்வதேச மகளிர்தினம் 2026

# மகளிருக்கான ஓட்டப்பந்தயம் ஈரோட்டில் நடைபெற்றது



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8) நேற்று நாடு தழுவிய அளவில் மகளிர் பங்கேற்கும் ஓட்டப்பந்தயங்கள் நடைபெற உள்ளது. மேலும் இது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம்மற்றும்அதன்இரண்டு பிரிவுகளான இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் மை பாரத் ஆகியவற்றின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தநிகழ்வானதுபெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தல், உடல் தகுதியை ஊக்குவித்தல், மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறை கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் இந்த நிகழ்வு 8.03.2026 நேற்று SDAT மாவட்ட விளையாட்டு அரங்கம் VOC பார்க்கில் நடைபெற்றது இப்போட்டிகள் 100 மீட்டர்,200மீட்டர்,400மீட்டர் பிரிவுகளில் நடைபெற்றது. இப்போட்டிக்கான வயது வரம்புகள் 13 வயதுக்குட்பட்டவர்கள், 13-18 வயதுடையவர்கள், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர் இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த மகளிர்கள் பெருமளவில் பங்கேற்று மகளிர் தினத்தை கொண்டாடினர்.



சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி அருகே சின்னதிருப்பதி பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக விழா விமர்சையாக நடைபெற்றது. சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓதி, புனித நீரை கோபுரங்கள் மீது ஊற்றி விழாவைத் தொடங்கினர். கோவில் அறங்காவல் குழு தலைவர் செல்வம், அறங்காவலர்கள் கண்ணன், 8வது வார்டு கவுன்சிலர் மூர்த்தி மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்துகொண்டு பெருமாளை தரிசித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.